**செய்தி வெளியீடு எண்: 02/01/2021** **நாள்: 02.01.2021**

## பத்திரிக்கைச் செய்தி

### 2020 டிசம்பர் மாதத்தில் 12.30 லட்சம் பயணிகள் சென்னை மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்

### 07.09.2020 முதல் 31.12.2020 வரை 31.52 லட்சம் பயணிகள் சென்னை மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்

சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் கடந்த செப்டம்பர் மாதம் 7-ஆம் தேதி முதல் மீண்டும் துவங்கியது.

07.09.2020 முதல் 31.12.2020 வரை மொத்தம் 31,52,446 பயணிகள் மெட்ரோ இரயிலில் பயணம் செய்துள்ளனர்.

07.09.2020 முதல் 30.09.2020 வரை மொத்தம் 3,60,193 பயணிகள் மெட்ரோ இரயிலில் பயணம் செய்துள்ளனர்.

01.10.2020 முதல் 31.10.2020 வரை மொத்தம் 7,03,223 பயணிகள் மெட்ரோ இரயிலில் பயணம் செய்துள்ளனர்.

01.11.2020 முதல் 30.11.2020 வரை மொத்தம் 8,58,546 பயணிகள் மெட்ரோ இரயிலில் பயணம் செய்துள்ளனர்.

01.12.2020 முதல் 31.12.2020 வரை மொத்தம் 12,30,484 பயணிகள் மெட்ரோ இரயிலில் பயணம் செய்துள்ளனர்.

21.12.2020 அன்று 47,214 பயணிகள் மெட்ரோ இரயிலில் பயணம் செய்துள்ளனர்.

சமீபத்தில் தொடங்கப்பட்ட க்யுஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி செப்டம்பர், 2020 முதல் டிசம்பர், 2020 வரை மொத்தம் 83,813 பயணிகள் மெட்ரோ இரயிலில் பயணம் செய்துள்ளனர். மேலும், பயண அட்டை பயணச்சீட்டு (Travel Card Ticketing System) முறையைப் பயன்படுத்தி 18,49,944 பயணிகள் பயணம் செய்துள்ளனர்.

2020, டிசம்பர் மாதத்தில் மட்டும் க்யுஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி 29,583 பயணிகள் மெட்ரோ இரயிலில் பயணம் செய்துள்ளனர். மேலும், பயண அட்டை பயணச்சீட்டு (Travel Card Ticketing System) முறையைப் பயன்படுத்தி 6,58,213 பயணிகள் பயணம் செய்துள்ளனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயிலில் பயணிப்பவர்களுக்கு க்யுஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டில் ஒருவழிப்பயண

அட்டை, இருவழிப்பயண அட்டை, பலவழி பயன்பாடு அட்டை ஆகியவற்றில் 11.09.2020 முதல் 20% தள்ளுபடி அளித்து வருகிறது. ஏற்கனவே செயல்பாட்டில் உள்ளவாறு மெட்ரோ இரயில் பயண அட்டைகளை (Travel Card) பயன்படுத்தி பயணிக்கும் பயணிகளுக்கு 10 சதவீத கட்டணத் தள்ளுபடி வழங்கப்படுகிறது.

மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள அனைத்து நுழைவு வாயில்கள் மற்றும் அவற்றை இணைக்கும் சுரங்கப்பாதைகள், மின்தூக்கிகள், நகரும் படிக்கட்டுகள் போன்ற அனைத்து வசதிகளும் பொதுமக்கள் மற்றும் மெட்ரோ இரயில் பயணிகளுக்கு பயனளிக்கும் வகையில் திறக்கப்பட்டுள்ளன.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மேற்கொண்டுள்ள பயணச்சீட்டு வழங்கும் முறை மற்றும் அனைத்து விதிமுறைகளையும் பயணிகள் பின்பற்றி தனிமனித இடைவெளியை கடைபிடித்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**